PERMANENT REFERENCE

# Analysis of the problems of application of Teachers Training with special reference to Batticaloa Zone.

658.312 404 072 KRI

KRISHNAVENI ARUMUGAM

RCN7663
Project Report
Library - EUSL

Department of Commerce
Faculty of Commerce and Management
Eastern University
Srilanka

2003

## பொருளடக்கம்


| விபரம் | பக்க எண் |
|---|---|
| ஆய்வுச்சுருக்கம் | I |
| அட்டவணைப் பட்டியல் | II |
| வரைபடப்பட்டியல் | III |
| நன்றியுரை | IV |
| அத்தியாயம் 01 | |
| ஆய்வு முற்பகர்வு | 01 – 06 |
| அத்தியாயம் 02 | |
| நூலாய்வு | 07 - 27 |
| அத்தியாயம் 03 | |
| ஆய்வுப்பின்னணி | 28 - 38 |
| அத்தியாயம் 04 | |
| தரவு முன்வைத்தலும் பகுப்பாய்வும் | 39 - 58 |
| அத்தியாயம் 05 | |
| தீர்வுகள் | 59 – 69 |
| முடிவுரை | 70 – 71 |
| உசாத்துணை நூல்கள் | 72 |
| பின்னிணைப்புக்கள். | |
| வினாக்கொத்து | I - VI |

# ஆய்வுச் சுருக்கம்

ஆசிரியர்கள் தொழில்வாண்மை விருத்தி செய்து கொள்ளுவதற்காக ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகள் மூலம் பயிற்சி வழங்கப்படுகின்றது. இங்கு பெறும் பயிற்சிகளுக்கு ஏற்ப ஆசிரியர்கள் பாடசாலைகளில் செயற்படுவதற்கு ஏற்ப பாடசாலையில் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை இலகுவானதும் மகிழ்ச்சிகரமானதாகவும் மாற்றவதே இவ் ஆய்வின் நோக்கமாகும். அதாவது பௌதீகரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் சாதகமான சூழலை ஏற்படுத்திக் கொடுத்தலாகும். உதாரணமாக போதிய காற்றோட்டமு இடவசதி கொண்ட வகுப்பறை தளபாடங்கள் கற்பித்தல் சாதனங்கள் போன்ற பௌதீக வசதிகளையும் மேலும் ஏனைய அதிபர் ஆசிரியர் ஒத்துழைப்புக்களை ஆசிரியர் நலன் ஓம்பக்கூடிய திட்டங்கள் போன்ற உளவியல் ரீதியான திருப்தித் தன்மைகளை ஆசிரியர்களுக்கு ஏற்படுத்திக் கொடுப்பதைக் குறிக்கின்றது.

இந் நோக்கைக் கொண்டு இவ் ஆய்வினை மேற்கொள்ள காரணம் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் அதனை நடைமுறைப்படுத்தும்போது எதிர்கொள்ளும் தடைகளும் இடர்களுமே ஆகும். அதாவது பயிற்சிகளில் கூறப்பட்டது போல செல்லும் பாடசாலை பாடம் மாணவர் பௌதீக வளங்கள் என்பன அமைவதில்லை. இதனால் தரப்பட்ட பயிற்சிகளில் பெரும்பாலானவற்றை பூரணமாக நடைமுறைப்படுத்த முடியவில்லை. சிலவற்றை முற்றாகவே செயற்படுத்த முடியவில்லை. இது ஆசிரியர்களுக்கு தமது கடமையைச் செய்யும் போது மிகப்பெரிய தடையாக உள்ளது. இதற்கு உதாரணம் ஒன்றை நோக்குவோமாயின் விஞ்ஞான ஆசிரியர் ஒருவர் விஞ்ஞான ஆய்வுகூடம் இல்லாத ஒரு பாடசாலைக்கு செல்லும்போது விஞ்ஞானபாடத்தை கற்பிப்பதில் பெரும் சிரமங்களை எதிர் கொள்கிறார். ஆசிரியர்கள் தொழில் ரீதியாக ஒரு விரக்தி நிலைக்கு தள்ளப்படுகின்றனர்.

இப் பிரச்சினையை ஆய்வு செய்வதற்கு தரவுகள் திரட்ட முதன்மைத்தரவுகளும் துணைத்தரவுகளும் பெறப்பட்டன . முதன்மைத்தரவுகளாக கலாசாலை அதிபருடன் நேரடிப் பேட்டி ஒன்றின் மூலமும் ஆசிரியர்களிடம் வினாக் கொத்து மூலமும் நாளாந்த அவதானிப்புக்கள் மூலமும் தரவுகள் பெறப்பட்டது. இவை தவிர துணைத்தரவுகளாக மட்டக்களப்பு கலாசாலை ஆண்டுதோறும் வெளியிடும் சஞ்சிகை ஆசிரியர் பயிற்சி பற்றிய பத்திரிகை கட்டுரைகள் மேலும் கல்வித்திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட புள்ளிவிபரத்தரவுகள் போன்றவையும் பெறப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டது.

இத் தரவுப்பகுப்பாய்விலிருந்து பிரச்சினைகளின் தன்மை புள்ளிவிபர ரீதியாக பெறப்பட்டுஇனங்காணப்பட்டது. இவ்வாறு இனங்காணப்பட்ட

பிரச்சினைகளுக்குதீர்வுகளும் முன்வைக்கப்பட்டுள்ளது. இத்தீர்வுகளானது கற்பித்தல் செயற்பாட்டிற்கு மிக அவசியமானது என கருதப்பட்ட பாடசாலைச் சூழல் பௌதீக வளங்கள் கற்பித்தல் சாதனங்கள் வகுப்பறை முகாமைத்துவம் தொடர்பாடல் என்ற 5 விடயங்கள் சார்பாக முன்வைக்கப்பட்டுள்ளது.